பக்கங்கள் 37+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 11 வியாழக்கிழமை 26.12.2024 | அதிர்வு 147

## கடலில் மூழ்கிய மூவரின் சடலங்களும் ஒதுங்கின

(கனகராசா சரவணன், வடிவேல் டினேஸ்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சங்கமன்கண்டி கடலில் நீராடச் சென்ற தந்தை, மகன் மற்றும் அவரது

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# ஆழிப்பேரலை நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

## உயிரிழந்தோரின் உறவுகள் கண்ணீர் விட்டுக் கதறல்

கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்ந்து இன்று காலை தமிழர் தேசம் உட்பட இலங்கைத் தீவு எங்கும் உணர்வு பூர்வமாக நினைவேந்தல்கள் இடம்பெற்றன.

கடலையே நம்பி வாழ்ந்த மக்களைக் கடலே கொன்றொழித்த சுனாமிப் பேரலை தாக்கி இன்றுடன் இருபது ஆண்டுகள் பூர்த்தியாகுகின்றன.

இதனை ஒட்டி நாடளாவிய ரீதியில் விசேட நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

சுனாமி தாக்கிய அதே நேரத்தில் இன்று புதன்கிழமை காலை 9.25 முதல் 9.27 வரை நாடு முழுவதும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

03

# 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இந்த ஆண்டில் இலங்கை வருகை

## ரணில் அரசின் இலக்கு எட்டப்பட்டது




2024 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் இரண்டு மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தாய்லாந்தில் (Thailand) இருந்து வருகை தந்த ஒரு தம்பதியினரே சுற்றுலாப் பயணிகளின் இரண்டு மில்லியன் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

கடந்த ஜனவரியில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்க்ரமசிங்க இந்த ஆண்டுக்குள் இரண்டு மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு

03

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனாநாயக்கபுர பகுதியில் நேற்று புதன்கிழமை மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனொ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அம்பாறை பொலிஸ் நிலையம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நவகம்புர பகுதியைச் சேர்ந்த 35 – 40 க்கு இடைபட்ட வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மின்கம்பத்தில் ஏறி கம்பிகளை அறுக்க முயன்ற போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தது தற்போதைய விசாரணையில் தெரியவந்துள்ளது.



# வவுனியாவில் கிறிஸ்மஸ் இரவு விபத்தில் யாழ் இளைஞர் பலி

(கி.வசந்தன்)

வவுனியா, கோவில்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்தனர்.

நேற்று இரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கிறிஸ்மஸ் தினமான புதன்கிழமை இரவு இந்த இளைஞர் மற்றொரு இளைஞருடன் வவுனியா, கோவில்குளம் பகுதியில் சென்ற சமயம் மோட்டார் சைக்கிள், சாரதியான அவரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் கரையில் இருந்த மின்சார கம்பத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

இளைஞர் பலத்த காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். மற்றைய நபர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவத்தில் யாழ் அராலிபகுதியை சேர்ந்த ப.சஞ்சயன் என்ற 22 வயதான இளைஞரே மரணமடைந்தவராவார். விபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார்விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர்.

# முதலையிடம் சிக்கிய பெண்

களு கங்கை ஆற்றில் பானை கழுவச் சென்ற பெண் ஒருவரை முதலை பிடித்து இழுத்துச் சென்றுள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

தொடங்கொட கொஹொலான வடக்கு பிரதேசத்தில் வசிக்கும் 50 வயதுடைய பெண்ணொருவரையே முதலை இழுத்துச் சென்றுள்ளது.

களுத்துறை கொஹொலன பிரதேசத்தில் களு கங்கைக்கு அருகில் இந்தப் பெண் முதலையிடம் சிக்கினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலை இழுத்துச் சென்றப் பெண்ணை படகுகள் மூலம் பிரதேச மக்கள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சடலமாக மீட்கப்பட்டார்.

# விஷ ஊசி போட்டு வயோதிபப் பெண் கொல்லப்பட்டார்

எழுபது வயதுடைய திருமணமாகாத பெண்ணொருவர் விஷ ஊசி போட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் திக்வெல்ல பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காணித் தகராறு தொடர்பான நீதிமன்ற வழக்கின் பின்னணியில் இந்த மரணம் சந்தேகத்திற்குரியது என உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

டிக்வெல்ல தெற்கு பகுதியில் உள்ள வீடொன்றில் வசிக்கும் 70 வயதுடைய திருமணமாகாத பெண்ணொருவர் விஷ ஊசி போட்



டுக் கொண்டார் எனக் கூறி மாத்தறை, பதிகம வைத்தியசாலையில் டிசம்பர் 20ஆம் திகதி பிற்பகல் சேர்க்கப்பட்டார்.

பின்னர் மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர், அங்கு 4 நாள்களாக தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

# கிளிநொச்சி விபத்தில் 2 வயதுக் குழந்தை பலி

கிளிநொச்சி நகரில் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் இரண்டு வயது குழந்தை பலியானது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமுற்ற நிலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஏ9 வீதியால் பயணித்த ரிப்பர் வாகனம் இந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளை ரிப்பர் வாகனம் குறிப்பிட்ட அளவு தூரம் இழுத்து சென்றுள்ளதுடன், தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றின் விளம்பர பலகை மற்றும் தொலைத்தொடர்பு கம்பம் உள்ளிட்டவற்றையும் சேதப்படுத்தியுள்ளது.

அந்த ரிப்பர் வாகனத்தை செலுத்திய சாரதி மதுபோதையில் இருந்தார் என சம்பவ இடத்தில் நின்ற மக்கள் குறிப்பிடுகின்றனர். சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு வயது குழந்தை பலியானதுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் ஆறு வயதுடைய குழந்தை ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்ச்ப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் படுகாயமடைந்த குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல் தெரிவிக்கின்றது.

சம்பவம் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ஆழிப்பேரலை...

சுனாமி அனர்த்தத்தை நினைவுகூரும் வகையில், இன்றைய தினம் – டிசம்பர் 26 ஆம் திகதி – தேசிய பாதுகாப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான மாவட்ட ரீதியாக நினைவேந்தல்கள் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்டன.

சுனாமி அனர்த்தத்தில் சேதமடைந்த 50 ஆம் இலக்க என்ஜினுடனான ரயில் ஒன்றும் வழமைபோல் பெரேலியவை சென்றடைந்தது. ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் குழுவொன்றும் அந்த ரயிலில் பயணித்தது.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவுக்கு அருகில் ஆழ் சமுத்திரத்தில் பெரும் குமுறலாக 9.1 மெக்னிடியூட் அளவில் வெடித்த பூகம்பம் கிளப்பி விட்ட ஆழிப் பேரலை இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, இலங்கை, இந்தியா உட்பட்ட பல நாடுகளைத் தாக்கி மிக நீண்ட கடற்கரையோர நிலங்களை சின்னாபின்னமாக்கி, சில மணிநேரத்திலேயே அடங்கிப்போனது.

இந்த ஆழிப் பேரலை சுனாமியின் சீற்றத்தால் 14 நாடுகளில் 2 இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் செத்து மடிந்தனர். இதில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள்.

இலங்கையில் ஆழிப்பேரலைகளால் 35 ஆயிரத்து 322 பேர் இறந்தனர் என அறிவிக்கப்பட்டது. உண்மையில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்தைத் தாண்டும் என்பது பலரின் ஊகமாக இருந்தது. ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தற்காலிகமாக இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. ஒன்றரை இலட்சம் பேர் தமது வாழ்வாதாரத்தை இழந்தார்கள். அவர்களுள் 75 வீதமானவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டவர்கள். அத்துடன் ஆயிரக்கணக்கான வீடுகள், வியாபார நிலையங்கள் என்பன முற்றாக அழிந்து போயின. சில நூற்றுக்கணக்கான உல்லாச விடுதிகள், உணவகங்கள் என்பன சேதமாகின. ஆயிரக்கணக்கான வாகனங்கள் உட்பட பெரும் சொத்திழப்பும் ஏற்பட்டது.

பேரழிவின் இருபதாவது ஆண்டு நினைவு தினம் இலங்கை முழுவதிலும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மாவட்ட செயலகங்களில் தனித் தனியாக நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

## 2 மில்லியன்...

ஈர்த்தெடுப்பதற்கான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

அதன் பலனாக தற்போதைக்கு – வருட முடிவுக்கு முன்னர் – இந்த எண்ணிக்கையை இலங்கை எட்டியுள்ளது.

கடந்த 2020ம் ஆண்டின் பின்னர் வீழ்ச்சியுற்ற சுற்றுலாத்துறையானது கடந்த ஆண்டில் படிப்படியாக வளர்ச்சி பெறத் தொடங்கி, இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டிப் பிடித்துள்ளது

அதன் பிரகாரம் இந்த ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில், டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் கடந்த 22 ஆம் திகதி வரை மாத்திரம் 161,383 பேரின் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது.







## கடலில் மூழ்கிய...

உறவினரான சிறுவன் உட்பட 3 பேர் கடல் அலையால் இழுத்துச் சென்று காணாமல் போயுள்ள நிலையில் அவர்களது சடலங்கள் இன்று வியாழக்கிழமை மாலை விநாயகபுரம் மங்கமாரி கடற்கரையில் ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

பொத்துவில் சங்கமன்கண்டியைச் சேர்ந்த 38 வயதுடைய மயில்வாகனம் நந்தராஜ், அவருடைய 15 வயதுடைய மகன் டினுஜன் மற்றும் நந்தராஜ் சகோதரியின் மகனான 17 வயதுடைய கிரிஷோர் ஆகிய மூவருமே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டனர்.

நேற்று புதன்கிழமை மாலையில் நத்தார் பண்டிகையையிட்டு கடலில் நீராடச் சென்ற சமயம் இவர்கள் கடல் அலையால் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல் போயினர்.

காணாமல் போனவர்களை உறவினர்கள், கடற்படை மற்றும் பொலிஸாருடன் இணைந்து தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த நிலையில் விநாயகபுரம் மங்கமாரி கடற்கரை பகுதியில் இன்று காலையில் முதலில் 17 வயது சிறுவனின் சடலம் கரை ஒதுங்கியது. இதனையடுத்து சிலமண நேரத்தின் பின்னர் ஒன்றின் பின் ஒன்றாக மற்றைய இருவரது சடலங்களும் கரையொதுங்கின. சடலங்கள் மீட்கப்பட்டு திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காணாமல்போனோர் கணக்கு

இலங்கையில் காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கான முதலாவது தேசிய மாநாடு கொழும்பில் செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழுவின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டி ருக்கின்றது.

இலங்கையில் உள்ள அனைத்து சமூகங் களையும் சேர்ந்த காணாமல் போனவர்களின் 51 குடும்பங்களை ஒன்றிணைத்து இது நடத்தப்பட்டுள்ளது.

காணாமல்போனவர்களின் குடும்பங்கள், மற்ற சமூகங்களைச் சேர்ந்த இத்தகைய குடும்பங்கள் ஆகியன தங்களுக்குள் தொடர்பு கொள்ளவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், காணாமல் போன தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடுவதில் எதிர்கொள்ளும் பொதுவான சவால்கள் மற்றும் அவற்றை எவ்வாறு சமாளிப்பது என்பதைப் பற்றி விவாதிக்கவும் மிகவும் தேவையான மனிதாபிமான இடத்தை இந்த மாநாடு வழங்கியது என செஞ் சிலுவைச் சர்வதேசக் குழு தான் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவித்தது.

காணாமல் போனவர்களின் குடும்பங் களின் பன்முகத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்குத் தற்போதுள்ள செயல்முறை கள் மற்றும் பொறிமுறைகளை மேம்படுத் துவது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரி களுடன் குடும்பங்கள் உரையாடலில் ஈடுபடுவதற்கான ஓர் அரங்கமாகவும் இந்த மாநாடு அமைந்தது என அந்த அறிக்கை தெரிவித்தது.

இது ஒரு நல்ல முயற்சிதான். ஆயினும் இலங்கையில் வடக்கு - கிழக்குச் சேர்ந்த தமிழர்களின் தரப்பில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் - உறவுகளின் - பிரச்சினைகள், எதிர்பார்ப் புகள் வேறு. தென்னிலங்கையில் அதே போல உறவுகளை இழந்தவர்களின் பிரச்சி னைகள் வேறு. இரண்டுமே வெவ்வே றானவை.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அப்படிக் காணாமல் ஆக்கப் பட்டோர் விவகாரம் தொடர்பில் கொண் டிருக்கும் கருத்து நிலைப்பாடு தெற்கில் உள்ளோரின் கருத்து நிலைப்பாட்டில் இருந்து வேறுபட்டது.

பயங்கரவாதங்களில் மிக மோசமான பயங்கரவாதம் 'அரச பயங்கரவாதமே' என்று வடக்கு - கிழக்கு தமிழர்கள் கருது கிறார்கள். அது உண்மையும் கூட. தன்னைச் சட்டரீதியான - இறைமையுள்ள - ஒரு நாடு எனக் கூறிக் கொள்ளும் ஓர் அரச கட்டமைப்பு மேற்கொண்ட 'அரச பயங்கர வாதத்தினால்' தங்களின் உறவுகள் வல் வந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்று வடக்கு கிழக்கு தமிழர்கள் வெஞ் சினம் கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் உறவுகள் காணாமல் ஆக்கப்பட் டமை தொடர்பில், நீதி - நேர்மையான விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, அவற்றைப் பகிரங்கப்படுத்தி, பொறுப்பு கூறலை நிலைநாட்டி, இது விடயத்தில் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் எண்ணம் அதைச் செய்ய வேண்டிய ஆட்சியாளர்களுக்கு கிஞ்சித்தும் கிடையாது என்ற வெப்பியாரத்தில் - சீற்றத்தில் - கனலும் மனதுடன் உழன்று கொண்டிருக்கின்றார்கள் வடக்குக் கிழக்குத் தமிழர்கள்.

தங்கள் உறவுகளை வலிந்து காணாமல் ஆக்கிய கொடூரத்தை - கிரிமினல் குற்றத்தை - புரிந்த தரப்புகளே ஆட்சியாளராக இருந்து கொண்டு, அது பற்றிய விசாரணை களை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பில் இருக்கும் அவலம் தங்களுக்கு என்ற ஆதங்கத்தில் அவர்கள் உள்ளனர்.

தங்கள் உறவுகளை அரச பயங்கரவாதத் திற்குப் பறி கொடுத்த வடக்கு - கிழக்குத் தமிழர்கள் அந்த கொடூரத்திற்கு அதே அரசு நீதி செய்யவே செய்யாது என்ற தெளிவில் இருக்கின்றார்கள்.

ஆனால் தென்னிலங்கையில் காணாமல் போனோரின் உறவுகள் எதிர்கொள்ளும் பிரச்சினை வேறு.

தங்கள் உறவுகள் காணாமல் போனமை தொடர்பில் உண்மை கண்டறியப்பட மைக்காக அவர்கள் ஆட்சித் தரப்பை நோகும் நிலையில் இல்லை.

ஆகவே, இந்த இரு தரப்பாரையும் தேசிய ரீதியில் ஒன்று படுத்தும் குடும்ப இணைவு முயற்சிகள் பெரும் பலனைத் தரக்கூடிய வையாக இருக்கும் என்று நம்புவதற்கு இடமில்லை.

காணாமல் ஆக்கப்படுகின்ற குற்றத்தை இழைத்த தரப்புக்களே அவற்றை விசாரிக் கும் அல்லது உண்மையைக் கண்டறியும் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டால் மட்டுமே வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு இவ்விடயத்தில் நீதி, நியாயம் கிடைப்ப தோடு, பொறுப்புக் கூறலும் நிலை நிறுத் தப்பட வாய்ப்பாகும் என்பதுதான் உண்மை நிலைமையாகும்.

# நாடு முழுவதும் இன்று உணர்வுபூர்வமாக ஆழிப்பேலை நினைவஞ்சலி நிகழ்வுகள்

(பா.சதீசன்)

ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்ட மக்களின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று (26) காலை 8.05 மணியளவில் புதுக்குடியிருப்பில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வன்னிகுறோஸ் மற்றும் சுனாமி நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் சுனாமியால் உயிர்நீத்த ஆயிரக்கணக்கானவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு ஐயனார்கோவிலடி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவாலயத்தில் உயிரிழந்தவர்களிற்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், பொது சுடர் ஏற்றப்பட்டதனை தொடர்ந்து ஏனையவர்கள் சுடர் ஏற்றினர். நினைவு தூபிக்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


புதுக்குடியிருப்பில்...
















# யாழ். வடமராட்சி கிழக்கு, உடுத்துறையில்...

ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தில் பலியான உறவுகளின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் உள்ள சுனாமிப் பொது நினைவாலயத்தில் இன்று நடைபெற்றது.

இதன் போது ஆழிப் பேரலையில் உயிரிழந்த உறவுகளின் நினைவாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன் போது தமது உறவுகளின் கல்லறைகள் முன்பாக கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தி அங்கு வந்திருந்த உறவுகள் கதறியழுதனர்.

இவ் நினைவேந்தல் நிகழ்வில் ஆழிப் பேரலையில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், மதகுருமார்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது













# யாழ். வடமராட்சி கிழக்கு, உடுத்துறையில்...













# மட்டு. நாவலடியில்...!



சுனாமி அனர்த்தம் இடம் பெற்று இன்றுடன் 20 ஆண்டுகள் கடந்துள்ள தனை நினைவு கூறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட சுனாமி நினை வேந்தல் நிகழ்வுகள் இன்று மட்டக்களப் பின் பல பகுதிகளிலும் இடம்பெற்றது.

இலங்கையில் மிக உயரமான சுனாமி நினைவுத்தூபியை கொண்டி ருப்பதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தின்போது அதிக உயிரிழப்புகளை எதிர்கொண்ட கிராமம் என்ற நிலையில் உள்ள மட்டக்களப்பு நாவலடி சுனாமி தூபியில் இன்றைய தினம் உணர்வுபூர்வமான நினைவேந் தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

நாவலடி சுனாமி நினைவுக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாவலடி சித்திவிநாயகர் ஆலயத்தில் காலையில் விசேட பூஜைகள் நடை பெற்றதை தொடர்ந்து சுனாமி நினைவுத் தூபியில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது விசேட ஆத்மசாந்தி பூஜைகள் நடைபெற்றதுடன் உயிர்நீர்த்த உறவுகளினால் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் வழிபாடுகளும் முன்னெடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நாவலடி கடற்கரையில் ஆத்மசாந்திக்காக விசேட பூஜைகள் நடைபெற்று தமது உறவுக ளின் ஆதம்சாந்திக்கான வழிபாடுகளும் கிரியைகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் அருட்தந்தையர்க ளான ஜோசப்மேரி,க.ஜெகதாஸ் அடிக ளார் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப் பினர்களான இரா.சாணக்கியன்,ஞா. சிறிநேசன்,இ.சிறிநாத், முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர்களான பூ.பிரசாந் தன்,இரா.துரைரெட்னம், முன்னாள் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேபோன்று மட்டக்களப்பு புது முகத்துவாரம் நினைவுத்தூபியில் நினைவேந்தல் நிகழ்வு உணர்வூர்வு மாக நடைபெற்றது.

மட்டக்களப்பு நாவலடி,புது முகத்துவாரம் பகுதியில் சுனாமி அனர்த் தம் காரணமாக சுமார் 1,100 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு கள்ளப்பாட்டில்...

**(விஜயரத்தினம் சரவணன்)**

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் முல்லைத்தீவு – கள்ளப்பாட்டில் உயிரிழந்தோரின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று கள்ளப்பாடு தெற்குப் பகுதியில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து ஆழிப்பேரலையின்போது உயிரிழந்த உறவுகளின் திருஉருவப் படத்திற்கு மலர்தூவப்பட்டு, சுடரேற்றப்பட்டதுடன், ஆழிப்பேரலையினால் காவுகொள்ளப்பட்டவர்களின் உறவினர்கள் கதறி அழுது, கண்ணீர் சொரிந்து தமது அஞ்சலிகளை உணர்வெழுச்சியுடன் மேற்கொண்டனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் வன்னிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை செயலாளர் திருமதி.இராஜஜோகினி ஜெயக்குமார், காணி உத்தியோகத்தர் சோதிநாதன் சேந்தன், கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் சு.கரிகாலன், கள்ளப்பாடு வடக்கு கிராம உத்தியோகத்தர் ஸ்ரீ. கௌசல்யா, கள்ளப்பாடு கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், மீனவஅமைப்புக்களின் பிரதிநிதிகள், கள்ளப்பாடு கிராமமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



















# காரைதீவில்...!

(வி.ரி. சகாதேவராஜா )

காரைதீவில் 2004 சுனாமியில் உயிர்நீத்த 867 பேரை நினைவுகூர்ந்து காரைதீவு கடற்கரையில் நிமைன்டர் விளையாட்டு கழகத்தினரால் நிறுவப் பட்ட நினைவுத்தூபி முன்றிலில் இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் பொது வான ஆத்ம சாந்தி பிரார்த்தனை வைப வம் இன்று வியாழக்கிழமை காலை உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

சங்கத் தலைவர் எஸ்.மணிமாறன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெக ராஜன் கலந்து கொண்டார்

காரைதீவு பிரதேச செயலாளர் ஜி.அருணன், உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எஸ்.ஜகத், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப் பாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

ஆன்மீக அதிதிகளாக பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ சாந்தரூபன் குருக்கள், சிவஸ்ரீ தர்சன் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு ஆத்மார்த்த சுனாமி ஒளி தீபம் ஏற்றியதோடு அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.












# தம்பிலுவிலில்...!

(வடிவேல் டினேஸ்)

தம்பிலுவில் சைவநெறிக்கூடம் அமைப்பினால் தம்பிலுவில் பெரிய முகத்துவாரம் பகுதியில் உள்ள நினைவுத் தூபியில் இன்று காலை மலர் அஞ்சலி வழிபாடுகள் இடம் பெற்றது.

இதனை தொடர்ந்து தம்பிலுவில் சைவநெறிக்கூடம் அமைப்பினால் தாகசாத்தி நிகழ்வும் இடம் பெற்றது.

சுனாமி அனர்த்தம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் பத்தாயிரத் திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதுடன் 4216 பேர் உயிரிழந்ததுள்ளனர்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் சுனாமி அனர்த்ததினால் 4,445 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் 433 பேர் உயிரிழந்துள்ளனர்.












# மட்டக்களப்பில்....!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் இடம்பெற்றன.

மட்டக்களப்பு கல்லடி டச்பார், திருச்செந்தூர், நாவலடி மற்றும் புதுமுகத்துவாரம் ஆகிய பகுதிகளில் அதிக உறவுகள் காவு கொள்ளப்பட்டிருந்தனர், அதன் நினைவாக அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுத் தூபிகளில் சமய வழிபாடுகள் இடம் பெற்றன.

குறித்த நினைவேந்தல் நிகழ்வுகளில் சர்வ மத தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட உயிரிழந்த உறவுகளின் உறவுகள், பொது நிலையினர் என பலரும் கலந்து கொண்டு உயிர் நீர்த்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.













# மட்டு. மாவட்ட செயலகத்தில்...!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சுனாமி பேரலையினால் உயிர் நீத்த மக்களை நினைவு கூரும் நிகழ்வு இன்று காலை மட்டக்களப்பு மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளீதரன் தலைமையில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் சர்வமத தலைவர்கள், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ்.ஸ்ரீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் ஜீ.பிரணவன், மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப்பணிப்பாளர் எ.எஸ். எம் சியாத், பிரதம உள்ளக கணக்காளர், மாவட் செயலக கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.











# கல்முனை ஆதார வைத்தியசாலையில்...

( வி.ரி.சகாதேவராஜா )

சுனாமியில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து கல்முனை ஆதார வைத்தியசாலையில் சுனாமி நினைவு தின வைபவம் இன்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்திய சாலை ஊழியர்கள் கலந்து கொண்டனர். மலர் மாலை அஞ்சலி செலுத்தப்பட்டது.

இன்றைய தினத்தின் நினைவாக வைத்தியசாலை வளாகத்தினுள் பணிப்பாளருடன், சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரும் இணைந்து மரம் ஒன்றினை நட்டு வைத்தனர்.

இந்நிகழ்வில் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.











# மாளிகைக்காட்டில்...!

கடந்த 2004 உலகை தாக்கிய சுனாமி பேரலையின் 20 வது ஆண்டு நினைவு தின துஆ பிராத்தனையும் குர்ஆன் தமாம் செய்யும் நிகழ்வும் இன்று (26) காலை மாளிகைக்காடு அந்-நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் ஏற்பாட்டில் பள்ளிவாசலின் பதில் தலைவர் ஏ.எம். ஜாஹீரின் தலைமையில் நடைபெற்றது.

சுனாமியால் உயிர் நீத்த உறவுகளுக்கான துஆ பிரார்த்தனையை மாளிகைக்காடு அந்-நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் பேஸ் இமாம் மௌலவி ஏ.எல்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) நிகழ்த்தினார். இந்நிகழ்வில் உலமாக்கள், மாளிகைக்காடு கிராம நிலதாரி ஏ.எம். நஜீம், மாளிகைக்காடு அந்-நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர், பொருளாளர் எம்.எப்.எம். றிபாஸ், ஆலோசகர் ஐ. இஸ்திகார் உட்பட நிர்வாகிகள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.









# மாளிகைக்காட்டில்.....!

(நூருல் ஹுதா உமர் )

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் சுனாமி முன்னிட்டு சுனாமி நினைவு தின நிகழ்வும், குருதிக்கொடையும் இன்று வியாழக்கிழமை மாளிகைக்காடு மத்தி தோணா வீதியில் அமைந்துள்ள ஜனாஸா நலன்புரி அமைப்பின் கட்டடத்தில் நடைபெற்றன.

இந்த இரத்த தான முகாமை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன், காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன், காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர்.

இந்த இரத்த தான முகாமில் கலந்து கொண்டு இரத்த தானம் செய்ய ஆர்வமுள்ள அமைப்பின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர்.

சுனாமி நினைவு தின குர்ஆன் தமாம், துஆ பிரார்த்தனை, விசேட சொற்பொழிவு, குருதிக்கொடை நிகழ்வில் உலமாக்கள், காரைதீவு பிரதேச செயலக அரச அதிகாரிகள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் பிரதானிகள், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.













# ‘சுனாமி பேபி’யின் வீட்டில்...!

(கனகராசா சரவணன்)

கல்முனை பாண்டிருப்பில் சுனாமியின் போது கண்டெக்கப்பட்ட “சுனாமி 81“ பேபி என்றழைக்கப்படும் ஜெயராஜா அபிலாஷ் மட்டக்களப்பு குருக்கள் மடத்திலுள்ள அவரது வீட்டில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் தூபியில் இன்று வியாழக்கிழமை காலை 9.05 மணிக்கு குடும்பத்துடன் சடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

2004 ஆம் ஆண்டு கல்முனை பாண்டிருப்பு கடற்கரை பகுதியை அண்டிய பகுதியில் உள்ள வீட்டில் அபிலாஷ் இரண்டு மாத குழந்தையாக தாயாருடன் இருந்தபோது ஏற்பட்ட சுனாமியினால் பாதிக்கப்பட்டநிலையில் கடல் அலையால் அள்ளுண்டு அந்த பகுதியிலுள்ள காணி ஒன்றில் தெய்வாதினமாக உயிர் தப்பிய நிலையில் கூடை ஒன்றில் இருந்த நிலையில் அவரை வைத்திய சாலை ஒன்றில் கடமையாற்றிவந்த தாதியர் ஒருவர் எடுத்துச் சென்று தனது பிள்ளை என சொந்தம் கொண்டாடினார்.

இந்த நிலையில் அபிலாஷ் பொற்றேர் அது தனது குழந்தை என போரடி சட்டத்தை நாடினார். நீதி மன்றம் குழந்தையின் பெற்றோரை உறுதிபடுத்துவதற்காக இலங்கையில் முதல் முதலாக டி.என்.ஏ. பிசோதனை மூலம் 52 நாள்களின் பின்னர் அபிலாஷ் உண்மையான பெற்றோரை கண்டறிந்து அவர்களிடம் அபிலாஷை ஒப்படைத்தது.

சுனாமியால் உயிரிழந்த அனைவரது நினைவாக அபிலாஷ் வீட்டில் நினைவு தூபி ஒன்றை அமைத்து வருடாவருடம் நினைவேந்தலை நினைவு கூர்ந்து வருகின்ற நிலையில் சுனாமி 20 வருட நினைவதினத்தையிட்டு அபிலாஷ் அவரது தாய் தந்தை சகோதரியுடன் நினைவு தூபியில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.











# அக்கரைப்பற்றில்....!

(எம்.ஏ.றமீஸ்)

சுனாமியில் உயிர் நீத்தவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு அக்கரைப்பற்று சின்னமுகத்துவாரம் நாற்பதாம் கட்டை பிரதேசத்தில் இரட்சகர் தேவாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றது.

இப்பிரதேசத்தில் ஆழிப் பேரலையினால் உயிரிழந்த 55 சிறுவர்கள் அடங்கலாக 152 பேர் உயிரிழந்தனர். இவர்களின் ஆத்ம சாத்திக்காகவும் அவர்களின் ஈடேற்றத்திற்கெனவும் வேண்டி சுடர் ஏற்றப்பட்டு விஷேட வழிபாடுகளும் இடம்பெற்றமையுடன் மௌன அஞ்சலியும் இடம்பெற்றது. அருட்தந்தை சம்சொன் லோட்ஸ் ஜெயநிக்ஸன் அடிகளாரால் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதேவேளை, தம்பட்டை பிரதேசத்தில் ஆழிப் பேரலையினால் உயிரிழந்த 171 பேரின் ஆத்ம சாத்திக்காகவும் அவர்களின் ஈடேற்றத்திற்காகவும் வேண்டி தம்பட்டை இலவன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உயிர் நீத்தவர்களுக்கான நினைவஞ்சலி நிகழ்வு தம்பட்டை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது உயிரிழந்த குடும்பத்தவர்களின் உறவினர்கள், மத ஸ்தானங்களின் தலைவர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் போன்ற பலர் கலந்து கொண்டனர்.















# மூதூரில்....!

(ஹஸ்பர் ஏ.எச்.)

20 ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு மூதூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்பில் பொது மக்களின் பங்களிப்புடன் இன்று காலை 9.00 மணி அளவில் மூதூர் இறங்குதுறைமுக வாசலில் சுனாமி நினைவுத் தூபி திறந்து வைக்கப்பட்டது.

ஆழிப்பேரலையினால் மூதூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிரிவில் மரணித்த ஆத்மாக்களுக்கான நினைவாஞ்சலியும் மற்றும் சமய அனுஷ்டானங்களும் இடம்பெற்றன. மேலும் இரத்ததான முகாம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி நினைவு தினத்தில் முதன்மை அழைப்பாளராக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி கலந்து கொழ்ண்டார். மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன்,அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் கே.சுகுணதாஸ், சமூக நிறுவன உறுப்பினர்கள், சர்வ மத தலைவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களும் பங்கு பற்றினர்.













# அம்பாறை மாவட்ட செயலகத்தில்...!

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

ஆழிப்பேரலை நாளை நினைவு கூரும் வகையில் இன்று அம்பாறை மாவட்ட செயலகத்தில் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், தேசிய கொடியும் அரைக்கம்பத்தில் பரக்க விடப்பட்டது.









# நுவரெலியாவில்....!

(மஸ்கெலியா நிருபர்)

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று 20 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, தேசிய பாதுகாப்பு தினத்தைநினைவுகூரும்விசேடநிகழ்ச்சி யொன்று இன்று (26) நுவரெலியா மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வு தேசிய கொடி ஏற்றி, தேசிய கீதம் பாடப்பட்டு ஆரம்பமானது.

அங்கு காலை 9.27 மணியளவில் சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த மற்றும் காணாமல் போன அனை வரையும் நினைவுகூரும் வகையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத் தப்பட்டதுடன் பௌத்த, இந்து, இஸ்லா மிய சமய நிகழ்வுகளும் இடம்பெற் றன.





# மன்னாரில்.....!

(எஸ்.ஆர்.லெம்பேட்)

சுனாமி பேரலையில் உயிரிழந்தவர்களின் 20 நினைவேந்தல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை மன்னார் பிரதான பாலத்தடியில் மன்னார் பிரதேச சபை முன்னாள்உறுப்பினர் லுஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் இடம் பெற்றது.

சமூக செயற்பாட்டாளர் பெனடிற், ரெலோவின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் டானியல் வசந், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் மாவட்டப் பொறுப்பாளர் இரட்ணசிங்கம் குமரேஸ் உட்பட பலர் இணைந்து நினைவுச் சுடரை ஏற்றி நினைவஞ்சலியை ஆரம்பித்த. வைத்தனர். மீனவர்கள்,வர்த்தகர்கள், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள்,சமூக செயற்பாட்டாளர்கள் சுடர் ஏற்றி,மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.







# ஹட்டனில்....!

(க.கிஷாந்தன்)

சுனாமி ஆழிப்பேரலையில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு மலையக மக்கள் தமது அஞ்சலியை செலுத்தினர்.

ஹட்டன் பொலிஸார், நகர வர்த்தகர்கள் மற்றும் ஹட்டன் டிக்கோயா நகர சபையின் ஏற்பாட்டில் ஹட்டன் புத்தர் சிலைக்கு முன்னால் இடம்பெற்ற அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் அட்டன் நகரில் உள்ள வங்கி, நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.









# வவுனியா கோவில்குளத்தில்...!

(கி.வசந்தன்)

வவுனியா– கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் சுனாமி பேரலையில் உயிர் நீத்தவர்களின் நினைவாக விசேட வழிபாடும் அஞ்சலி நிகழ்வும் இன்று இடம்பெற்றன.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் மற்றும் அகிலாண்டேஸ்வரர் ஆலயதர்மகர்த்தா சபை அச்கியன இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இதில் அந்தணச் சிவாச்சாரியார்கள், ஆலய தர்மகர்த்தா சபையினர், ஆலய பகத்தர்கள், தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மோட்ச வழிபாட்டில் ஈடுபட்டனர்.

















# வவுனியா செயலகத்தில்....!

**(கி.வசந்தன்)**

வவுனியா மாவட்ட செயலகத்தில் சுனாமி பேரலையில் உயிர் நீத்தவர்களின் அஞ்சலி நிகழ்வு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர தலைமையில் இடம்பெற்றது.

அத்துடன் சுனாமி பேரவலம் தொடர்பாகவும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாகவும் அரச அதிபரின் கருத்துயும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திணைக்கள தலைவர்கள், அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



















# வவுனியா, பூந்தோட்டத்தில்...!

**(கி.வசந்தன்)**

வவுனியா, பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயம் மற்றும் வவுனியா நகரசபை யின் ஏற்பாட்டில் சுனாமி பேரலை யில் உயிர் நீத்தவர்களிற்கான அஞ்சலி நிகழ்வு இன்று இடம்பெற்றது.

பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவு தூபியில் இந்தப் பிரார்த்தனை நிகழ்வுகள் உணர்வு பூர்பமாக இடம்பெற்றன.

இந்த நினைவுத் தூபி, சுனாமிப் பேரலை ஏற்பட்டு 31 ஆம் நாளில் நரசிங்கர் ஆலய நிர்வாகத்தினரால் அமைக்கப்பட்டிருந்தமையுடன், இலங்கையின் முதலாவதாக அமைக் கப்பட்ட சுனாமி நினைவுத் தூபியாக வும் விளங்குகின்றது.

தற்போது நகரசபையால் இது புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பராம ரிக்கப்படுகின்றது. நரசிங்கர் ஆல யத்தின் உப தலைவர் கோ.சிறிஸ் கந்தராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ் வில் பிரதி அமைச்சர் உபாலி சமர சிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலக நாதன், முத்து முகமது, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் மற்றும் இந்து, பௌத்த மதகுருமார்கள், பொது அமைப்பு கள், கிராமமக்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்த னர்.






















# கள்ளப்பாடு பாடசாலையில்...!

**(விஜயரத்தினம் சரவணன்)**

கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும்போது ஆழிப்பேரலையினால் உயிரிழந்த 68 மாணவர்களுக்கு இன்று கள்ளப் பாடு பாடசாலையில் அஞ்சலி மேற் கொள்ளப்பட்டது.

ஆழிப்பேரலையில் உயீர்நீத்த மாணவர்களின் பெற்றோர் மற்றும், உறவினர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு ஆரம்பமானது.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன் பொதுச்சுடரை ஏற்றி நினைவேந்தல் நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து உயிர் நீத்த மாணவர் களின் நினைவாக கள்ளப்பாடு பாட சாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தூபிக்கு மலர் தூவி தீபங்களேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன், காணி உத்தியோகத்தர் சோதிநாதன் சேந் தன், கரைதுறைப்பற்று பிரதேசசபைச் செயலாளர் திருமதி.இராஜயோகினி ஜெயக்குமார், கள்ளப்பாடுஅ.த.க பாடசாலை அதிபர் ம.சுரேஸ்தரன், பிரதி அதிபர் திருமதி.அகிலா விஜயரட்ணம், உயிரிழந்த மாணவர்களின் பெற் றோர்கள் மற்றும், உறவினர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் இதன்போது ஆழிப்பேர லையில் உயிரிழந்த மாணவர்களின் நினைவாக உதவுங்கரங்கள் அமைப் பால் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட் டன.












# மன்னார் செயலகத்தில்...!

( வாஸ் கூஞ்ஞ)

தேசிய பாதுகாப்பு தின நிகழ்வு வியாழக்கிழமை மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிலும் அரச அலுவலகங்களிலும் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட தேசிய பாதுகாப்பு தின பிரதான நிகழ்வு மாவட்ட செயலகத்தில் இன்று காலை மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.





















# போக்குவரத்து விதிகளை மீறிச் செயற்பட்ட 9 ஆயிரம் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

போக்குவரத்து விதி மீறல்கள் மற்றும் கவனக் குறைவாக வாகனம் செலுத்தியது தொடர்பில் கடந்த 24 மணி நேரத்தில் 9 ஆயிரம் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பயணிகள் போக்குவரத்து பஸ்கள் மற்றும் பிற வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், இலங்கை பொலிஸ் கடந்த 23 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் போக்குவரத்து நடவடிக்கையை ஆரம்பித்தது.

வீதிப் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் விபத்துக்களைக் குறைத்தல் ஆகிய இலக்குடன், கடமையாற்றும் பொலிஸ் மா அதிபர் தலைமையிலான இந்த முயற்சி பண்டிகைக் காலம் முழுவதும் தொடரும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் போது 8,747 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், மீறல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொதுப் போக்குவரத்துக்கு மேலதிகமாக ஏனைய வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்து சட்டங்களை அமுல் படுத்துவதற்காக நாடு முழுவதும் போக்குவரத்து அதிகாரிகள் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# எரிந்து கிடந்த வாகனத்துக்குள் நபரொருவரின் சடலம் மீட்பு!

ஹபரணை பொலனறுவை பிரதான வீதியில் ஹத்தே கன்வானுக்கும் படுஓயாவுக்கும் இடையில் 38 ஆவது கிலோ மீற்றர் தூணுக்கு அருகில் நேற்றிரவு (25) இரவு கெப் வாகனமொன்றில் எரிந்த நிலையில் காணப்பட்டது. இந்த வாகனத்துக்குள் எரிந்த நிலையில் நபரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று மின்னேரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹபரணை மின்னேரிய வீதியில் பயணித்த நபர் ஒருவர் கெப் வாகனம் ஒன்று தீப்பிடித்து எரிகிறது என்று மின்னேரிய பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். இதனை அடுத்து மின்னேரிய பொலிஸார் எரிந்துகொண்டிருந்த கெப் வாகனத்தை மீட்டனர்.


நேற்று (25) இரவு 10 மணியளவில் தீ பரவியதாகவும், அப்போது கெப் வாகனம் ஹபரணை நோக்கி நிறுத்தப்பட்டிருந்தது என்றும் அதில் வேறு யாரும் இருக்கவில்லை என்றும் மின்னேரிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நபர் ஒருவரைக் கொன்று அவரது சடலத்தை வண்டியில் ஏற்றி, கெப் வாகனத்தை இந்த பகுதிக்கு கொண்டு வந்து நிறுத்தித் தீ வைத்து எரித்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மின்னேரியா பொலிஸாரும் பொலனறுவை மாநகரசபையின் தீயணைப்புத் திணைக்கள அதிகாரிகளும் பெரும் முயற்சியில் தீயை முழுமையாக அணைத்தனர்.

தீப்பிடித்த கெப் வாகனம் கொழும்பு பகுதியை சேர்ந்த ஒருவருக்கு சொந்தமானது என பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA




# கல்முனை - கொழும்புக்கு சொகுசு பஸ்; இ.போ.சபை முதல் தடவையாக சேவை!

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை போக்குவரத்து சபையின் கல்முனைச் சாலையால் கடந்த திங்கட் கிழமை முதல் முற்றிலும் குளிரூட்டப்பட்ட பஸ் சேவை முதல் தடவையாக ஆரம் பித்து வைக்கப்பட்டுள்ளது என்று சாலை முகாமையாளர் வி.ஜௌபர் தெரி வித்தார்.

இந்த பஸ் சேவையானது இரவு 10.30 மணிக்கு கல்முனை பிரதான பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து கட்டு நாயக்கா விமான நிலயம் சென்று, பின்னர் அங்கிருந்து கொழும்பு பிரதான பஸ்தரிப்பு நிலையம் சென்றடையும்.

இந்த பஸ்ஸில் பயணிக்கும் அனைத்து பயணிகளும் பயணச் சீட்டைப் பெறுவதற்குக் கல்முனை பிர தான பஸ்தரிப்பு நிலையத்திலும் மற்றும் ஒன்லைன் மூலமும் பெற்றுக்கொள் ளலாம்.

விரைவில் மேலுமொரு பஸ் கிடைக்கும் பட்சத்தில் ஒரே வேளையில் இரு வழிப் பயணத்துக்கு ஏற்பாடு செய் யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இது போன்று கல் முனையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இத்தகைய குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை ஒன்றை நடத்த முன்வர வேண்டும் என பொது மக்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர்.

# வைத்தியசாலைக்குள் சுத்தியலுடன் வந்த இருவர் பொலிஸாரால் கைது!

(பாறுக் ஷிஹான்)

வைத்திய அத்தியட்சகரின் உரிய அனுமதி இன்றிச் சுத்தியலுடன் வைத்தியசாலையில் அத்துமீறி உட் பிரவேசித்த இருவரை கல்முனை தலை மையக பொலிஸார் கைது செய் துள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட் டத்தில் உள்ள கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை வளாகத்தில் திங்கட் கிழமை (23) இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த வைத்தி யசாலையில் இருவர் அனுமதி இன்றி உட்பிரவேசித்தனர் என்று அங்கு பாது காப்பு பணிக்கு பொறுப்பாக இருந்த அதி காரியால் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் திங்கட்கிழமை (23) மாலை முறைப்பாடு செய்யப் பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கு அமைய அந்த இருவரையும் கைது செய்த கல்முனை தலைமையக பொலிஸார் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள் ளப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் கல்முனை மாநக ரில் உள்ள பிரபல ஆடையகம் ஒன்றின் பணியாளர்கள் என்றும் குறித்த வைத்தி யசாலை பணிப்பாளரின் முன் அனுமதி இன்றி சுத்தியலுடன் வைத்திய சாலைக்குள் பிரவேசித்து, வைத்திய



சாலையில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அவர்கள் முரண்பாடான கருத்துக்களை வைத்தியசாலை பாது காப்பு உத்தியோகத்தர்களிடம் தெரி வித்துள்ளனர் என்றும் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

கைதானவர்கள் வழமை போன்று தாங்கள் புதிய ஆண்டுக்கான கலண்டர் களை அரச தனியார் திணைக்களங்க ளில் ஆணி அடித்துக் கொழுவுவதற்குச் சென்றனர் என்றும் அதன் போது இவ் வாறான நிலைமை ஏற்பட்டது என்றும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் குறித்த வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி வைத்தியர் குணசிங்கம் சுகுணன் உள்ளக விசாரணை ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திகவின் வழிகாட்டலில் கல் முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் மேலதிக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# சம்மாந்துறை கிளினிக் நிலையத்துக்கு தற்காலிகக் கட்டடம் அமைக்க அனுமதி



(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பௌஸ் மாவத்தையில் அமைந்துள்ள கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் கட்டடத்தில் தற்காலிகமாக ஒரு பகுதியில் கிளினிக் நிலையம் இயங்கி வருகின்றது. இந்த நிலையில் இதற்கு இடப்பாற்றக்குறை காணப்படுவதால் அதனை நிவர்த்தி செய்யக் கோரி சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.நௌபர் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபாவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கு அமைய பிரதேச செயலாளர் கிராமிய அபிவிருத்தி சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, மற்றும் சம்மாந்துறை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா ஆகியோரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

இந்த நிலையில் கர்ப்பிணித் தாய்மார்களின் நலன் கருதி இடப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு இதற்கான தற்காலிக கட்டடத்தை அமைப்பதற்கு பிரதி அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தக் கட்டடத்தைப் பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் (24) நேரடி விஜயத்தினை மேற்கொண்டு அதற்கான அனுமதியைப் பிரதி அமைச்சர் வழங்கியுள்ளார்.

இதன் போது பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ ஆதம்பாவா, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம்.அஸ்லம், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.நௌபர், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் எம்.இம்தியாஸ், இணைப்பாளர் ஏ.சியாம் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# கிண்ணியா ஈச்சந்தீவுக் கிராமத்தில் யானை வேலிகளை அமையுங்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு இம்ரான் எம். பி. கோரிக்கை

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிண்ணியா ஈச்சந்தீவுக் கிராமத்தில் யானை வேலிகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் (24) நடைபெற்ற திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

கிண்ணியா நகர சபைப் பகுதியின் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவு ஈச்சந்தீவாகும். விவசாயக் குடும்பங்களே இங்கு அதிகமாக வாழ்ந்து வருகின்றன.

இங்கு காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. தென்னை போன்ற வான் பயிர்களை யானைகள் சேதப்படுத்தகின்றன. யானைகளால் வீடுகள் சேதமாக்கப்பட்ட சம்பவங்களும் கடந்த காலங்களில் பதிவாகியுள்ளன. இதனால் இம்மக்கள் இரவு வேளைகளில் அச்சத்துடனே வாழ்ந்து வருகின்றனர். இந்த விடயம் கிண்ணியா பிரதேச செயலாளருக்கு நன்கு தெரியும்.

எனவே, காட்டு யானைகளின் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த இந்தப் பகுதியில் யானை வேலி அமைக்கப்படவேண்டும். சுமார் 2 கிலோ மீற்றர் நீளமுள்ள யானை வேலி போதுமானதென இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த விடயத்தில் கவனம் செலுத்தி ஈச்சந்தீவுக் கிராமத்தில் யானை வேலி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.– என்றார்.







# 33 லட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதியை புலமைப் பரிசிலாக வழங்கிய தொழிலதிபர்

(பழுவூரான்)

மட்டக்களப்பிலுள்ள பிரபல பாடசாலையான மெதடிஸ்த மத்திய கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை (22) இடம்பெற்ற பொறியியல் பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் தொழிலதிபர் தேசபந்து மா.செல்வராசா மூன்றரை மில்லியனுக்கும் அதிகமான தொகையினை 10 மாணவர்களுக்கு உதவித் தொகையாக வழங்கியுள்ளார்.

பொறியியல் பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்காக நான்கு வருடத்துக்கான உதவித் தொகையாக மாதாந்தம் தலா 7 ஆயிரம் ரூபா வீதம் நான்கு வருடங்களுக்கு 33 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

அத்தோடு பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ள மேலும் 14 மாணவர்களுக்கு அவர்கள் பல்கலைக்கழகம் செல்லும்போது தமக்கு தேவையான ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்காக 5 ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர்களையும் வழங்கியுள்ளார்.



# கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு அம்பாறையில் விசேட பாதுகாப்பு

(பாறுக் ஷிஹான்)

கிறிஸ்மஸ், புது வருட பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பொலிஸ் மற்றும் முப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக கல்முனை, பெரியநீலாவணை, சவளக்கடை, சம்மாந்துறை, காரைதீவு ,திருக்கோவில், அக்கரைப்பற்று,பொத்துவில் பொலிஸ் பிரிவில் உள்ள தேவாலயங்களுக்கு இவ்வாறு பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

இப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களுக்கான பாதுகாப்பு தொடர்பாக தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அனைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் அம்பாறை மாவட்ட பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ள சிவில் குழுக்களுடன் ஒருங்கிணைந்து தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

அதற்கு மேலதிகமாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

தேவைப்பட்டால் இராணுவத்தினர் மற்றும் ஏனைய பாதுகாப்புப் படையினரின் உதவியும் பெறப்படும் என்றும் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களின் இடம்பெற்ற அசம்பாவிதங்களை போல இனிவரும் காலங்களில் நடைபெறாமலிருக்க இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் நத்தார் மற்றும் புத்தாண்டு பண்டிகைக் காலங்களில் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் விரிவான பாதுகாப்புத் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சவுதி அரேபியாவின் புகழ் பெற்ற இமாம் காத்தான்குடிக்கு வருகை!



(எஸ். சினீஸ் கான், சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சவுதி அரேபியாவின் புகழ் பெற்ற இமாம் அஷ்ஷெய்க் காரி முகம்மத் சஆத் நுமானி நாளை (27) வெள்ளிக்கிழமை காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி போன்ற பிரதேசங்களுக்கு வருகை தரவுள்ளார்.

இவர் காத்தான்குடி அல் அக்ஷா பள்ளிவாசலில் குத்பா உரையையும் ஜும்மாத் தொழுகையையும் நடத்தவுள்ளார்.

மேலும் ஏறாவூர் ஓட்டுப்பள்ளி ஜும்மா பள்ளிவாசலில் மஃரிப் தொழுகையையும், வாழைச்சேனை முகைத்தீன் ஜும்மா பள்ளிவாசலில் இஷாத் தொழுகையையும் நிகழ்த்தவுள்ளார்.

அவர் சவுதி அரேபியா மக்கா ஹரம் ஷரீபின் இமாம் அஷ்ஷெய்க் சுதைஸ்ஸின் குரல் உட்பட பல இமாம்களின் குரலில் குர்ஆனை ஓதக்கூடிய ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# ஹங்குராங்கெத்த கபரகல தோட்டத்தில் தீயால் பாதித்த குடும்பங்களுக்கு காணிகள்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. நடவடிக்கை

(க.கிஷாந்தன்)

அண்மையில் கபரகல தோட்டத்தில் தீயால் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்கள் தொடர்பாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பாக அவரின் பணிப்புரையின் பேரில் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.இராஜாராம் கபரகல தோட்டத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய பாதிப்புகள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்தார்.

உடனடியாக சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண பொருள்களை பெற்றுக் கொடுத்தார். பாதிகக்பட்டவர்களுக்குத் தனி வீடுகளை அமைப்பதற்கான காணிகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடியுள்ளார்.

தோட்ட நிர்வாகம் இவர்களுக்குக் காணிகளை வழங்க வேண்டும் என இந்த பேச்சு வார்த்தையில் தெரிவிக்கப்பட்டது. அதனை நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது. மிக விரைவில் அவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கு தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும் என்று தோட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இராதாகிருஷ்ணன் எம்.பி. விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையின் மூலம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மையில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் காணிகளை வழங்குவது தொடர்பாக பேச்சு முன்னெடுக்கப்பட்டு, அவர்களுக்கும் காணிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் குறித்த தோட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் காணிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு அது தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டு மிக விரைவில் அவர்களுக்கான காணிகள் பெற்றுக்கொடுக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசு நல்லாட்சி காலத்தில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வீடுகள் கட்டப்பட்டதை போல புதிய அரசும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனவும், இந்த நடவடிக்கையை விரைவுப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் கல்முனையில் ஒருவர் கைது!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ், பாறுக் ஷிஹான்)

அம்பாறை, கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் நேற்று புதன்கிழமை (25) கடற்கரை பள்ளி வீதி, கல்முனைக்குடி 02 பிரதேசத்தில் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே ஐஸ் போதைப் பொருள்களை நீண்ட காலமாக சிறு பொதி செய்து வியாபாரம் செய்து வந்த சந்தேக நபரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனைக்குடி 02 பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 1 கிராம் 790 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.



இதனையடுத்து, சந்தேக நபர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கைது நடவடிக்கை கல்முனை விசேட அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ. டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது.





# இருபது வருடங்கள் நிறைவடைந்துள்ள போதும் கையளிக்கப்படாமல் உள்ள சுனாமி வீட்டுத் திட்டம்

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து இருபது வருடங்களாகியும் இந்த அனர்த்தத்தின் மூலம் வெகுவாகப் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச மக்களுக்கு சவுதி அரேபிய அரசின் அறக்கட்டளை நிதி மூலம் நவீன முறையில் நிர்மாணிக் கப்பட்ட 500 வீடுகள் கொண்ட நுரைச்சோலை சுனாமி வீடமைப்புத் திட்டம்இதுவரைகையளிக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தின்போது முற்றாக பாதிக்கப்பட்ட 500 குடும்பங்களுக் காகவும், அக்குடும்பத்தவர்களில் தங்கி வாழும் 1232 பேரின் நன்மை கருதியும் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட் டன.

நுரைச்சோலை வீடமைப்புத் திட்டத் தைப் பல அரசுகள் ஆட்சியில் இருந்து வந்தவேளை தம்மை ஏமாற்றி வந்துள் ளன. தற்போது மக்கள் நல சேவைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசு இந்த வீட்டுத் திட்டத்தைத் தமக்கு வழங்கும் என்ற நம்பிக்கை இருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்ற னர்.

முன்னாள் வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சராக இருந்த பேரியல் அஷ்ரஃபின் முயற்சியின் பயனாக சவுதி அரேபிய நாட்டின் நிதி உதவியில், சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச மக்களுக்காக அக்கரைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆலிம் நகர் கிராமத் துக்கு அண்மையில் அமையப் பெற் றுள்ள நுரைச்சோலைப் பிரதேசத்தில் சுமார் 60 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலப்பரப்பில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதான நவீன வீடமைப்புத் திட்டமொன்று உருவாக்கப்பட்டது.

கடந்த 2006 ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் திகதி இவ்வீடமைப்புத் திட்ட நிர்மாணத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன்பிரகாரம் சுமார் 1000 மில்லி யன் ரூபாவுக்கும் அதிகமான நிதியைக் கொண்டு நவீன முறையில் 500 வீடு கள் இப்பிரதேசத்தில் நிர்மாணிக் கப்பட்டன.

சில காரணங்களின் அடிப்படையில் இவ்வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு 20 ஆண்டுகளாகியும் உரியர்களுக்கு வழங்கப்படாமலிருப்பது மிகுந்து வேத னையளிக்கின்றது என பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தக் கிராமத்தில் மகளிர் பாட சாலை, ஆண்கள் பாடசாலை, நவீன வைத்தியசாலை, பாரிய ஒன்று கூடல் மண்டபம், சனசமூக நிலையம், பள்ளி வாசல், பஸ் தரிப்பு நிலையங்கள், விளையாட்டு மைதானம், நவீன சந் தைக் கட்டடங்கள் மற்றும் நவீன ஓய் வறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதி களை உள்ளடக்கியதாக இந்த வீட மைப்புத் திட்டம் உருவாக்கம் பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைதாகினர்

(மஸ்கெலியா)

சட்டவிரோதமான முறையில் மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைதாகினர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. காசல்ரீ அது நீர் தேக்கத்துக்கு நீரை வழங்கும் பிரதான ஓயா வான கெசல்கமு ஓயாவில் சட்டவிரோதமான முறையில் மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்ட நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என நோர்வூட் பொலிஸார் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி ராஜநாயக்க தெரிவித்தார்.



நோர்வூட் வெஞ்சர் பகுதி ஊடறுத்து வரும் கெசல்கமு ஓயாவில் ஒரு சிலர் சட்டவிரோதமான முறையில் மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கிடைக்கப்பெற்ற தகவலை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த நோர்வூட் பொலிஸார் அங்கு சட்டவிரோ தமான முறையில் மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த நால்வரையும் கைது செய்தனர். அத்துடன் ஜென ரேட்டர் மற்றும் உபகரணங்களையும் மீட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மாணிக்க கற்கள் அகழ்வில் உள்ள குழியில் இருந்து நீரை அகற்றிக் கொண்டிருந்த வேளையில் கைது செய் யப்பட்டனர் என்று நோர்வூட் பொலி ஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கம்பளை, இரத்தினபுரி, பொகவந்தலாவ பிரதே சத்தை சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் நால்வரும் பொலிஸ் பிணையில் விடு தலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் எதிர்வரும் 31 ஆம் திகதி ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகும்படி பணிக்கபட்டு ள்ளனர் என்றும் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.



# கிழக்கு மாகாண ஆசிரியர் சேவைக்கு 52 பேருக்கு நியமனம் வழங்கி வைப்பு!

(அபு அலா )

கிழக்கு மாகாண அரச ஆசிரியர் சேவைக்கு 2024 ஆம் ஆண்டுக்கான ஆட்சேர்ப்பில் முதற்கட்டமாக 52 ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் இன்று (26) திருகோணமலை ஆளுநர் அலுவல கத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.குகநாதன், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், கிழக்கு மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஜே.லியாகத்தலி, கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.ஆர்.ஹசந்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண அரச ஆசிரியர் சேவைக்கான முதற்கட்ட ஆட்சேர்ப்பில் நியமனங்களை ஏற்காத மற்றும் சேவைக்கு சமூகமளிக்காதவர்களுக்குப் பதிலாக 52 பேர் ஆட்சேர்ப்பு செய்யப் பட்டுள்ளனர் என்று கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நியமனம் பெற்றுள்ள நீங்கள் கடமைகளை சரியான முறையில் எதிர்கால சந்ததியினருக்கு திறம்பட ஆற்ற வேண்டும். திருப்திகரமான முறையில் சேவைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

முதற்கட்ட ஆட்சேர்ப்பில் சேவைக்கு சமூகமளிக்காத, நியமனங்களை ஏற்காதவர்களுக்குப் பதிலாக மொழி மூல அடிப்படையில் இந்த 52 பேரும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.







# திருமலை மீடியா போரத்தால் ஊடக விருது வழங்கி வைப்பு!









(மட்டு. துஷாரா, அபு அலா)

திருகோணமலை மீடியா போரத்தின் 5 ஆவது வருட பூர்த்தி விழாவும், ஊடகவியலாளர்கள் கௌரவிப்பும் போரத்தின் தலைவர் எச்.எம்.ஹலால்தீன் தலைமையில் கிண்ணியா நகரசபை மண்டபத்தில் நேற்று (25) இடம்பெற்றன.

இவ்விழாவுக்கு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி பிரதம அதிதியாகவும், கிண்ணியா நகரசபை செயலாளர் முகம்மது அனீஸ், கிண்ணியாவை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட எம்.வி.எம். பௌண்டேஷன் உரிமையாளர் எம்.வி.எம்.பௌமி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இதன்போது, கடந்த பல வருடங்களாக ஊடகத்துறைக்கு பெரும் பங்காற்றி வரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் சிறந்த ஊடகர் விருதுடன் சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ச்சியாகச் செய்திகளை வழங்கிய மற்றும் பிரதேசத்தில் நடக்கும் செய்திகளை உடனுக்குடன் வழங்கி வந்த மூன்று ஊடகவியலாளர்கள் தங்கப் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு ஊடக விருது, சமூக தாரகை விருது போன்றன வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளை நிகழ்த்திய சிறார்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.



# உயிர்ப்பலி எடுத்த ஆழிப்பேரலை!



யேசுராசா வினிதா

"புளியடி புளியடி எவடம் எவடம்" என நானும் எனது அக்காவும் அன்று ஒரு நாள் விளையாடிக் கொண்டிருந்தோம். அன்று கிறிஸ்மஸ்சுக்கு மறுதினம் ஞாயிற்றுக் கிழமை என்பதால் பாலர் பாடசாலையும் விடுமுறை. அதனால் நானும் அக்காவும் விளையாடிக் கொண்டிருந்தோம். முற்றத்தில் அம்மா சட்டி, பானை கழுவிக் கொண்டிருந்தாள். கடலுக்குச் சென்ற அப்பா அலறிக் கொண்டு வீதியால் ஓடி வந்து படலையை திறந்தார். நானும் அக்காவும் பயத்துடன் அப்பாவையே பார்த்துக் கொண்டிருந்தோம்.

"கடலலை ஊருக்கு வருதாம் பிள்ளைகளைத் தூக்குங்க ஓடுவோம்" என அம்மாவிடம் கூறினார். அம்மா பதறிக் கொண்டு முக்கியமான பைகளை எடுத்துக் கொண்டு எங்களையும் அழைத்துக் கொண்டு பக்கத்து ஊரிலுள்ள உயரமான ஒரு இடத்துக்குச் சென்றார்.

அப்பாவின் அலறல் சத்தமும், அம்மாவின் பதற்றமும், வீதியால் நாங்கள் ஓடிச் சென்றதும் இன்னமும் என் கண்களில் அப்படியே இருக்கிறது.

2004 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ்சுக்கு மறுதினத்தை உலகம் அவ்வளவு எளிதில் மறக்காது. அந்த ஞாயிற்றுக் கிழமை எழும்பிய ஆழிப்பேரலையின் ஓலத்தின் ஓசை 20 வருடங்கள் கடந்தும் ஓய்ந்தபாடில்லை. ஆழிப் பேரலையின் கோரத் தாண்டவம் நிகழ்ந்து 20 வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும் இன்றும் அதனுடைய வடுக்கள் மக்கள் மனதில் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

2004.12.26 அன்று அதிகாலையில் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள கடற் பகுதியில் திடீரென 9.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானது.

உலக வரலாற்றிலே இரண்டாவது மிகப் பெரிய நிலநடுக்கமாக இது பதிவாகியது. ஆழ்கடலில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் பேரதிர்வு காரணமாகச் சுனாமி எனும் ஆழிப்பேரலை பல நாடுகளைக் காவு கொண்டது.

இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, அந்தமான் தீவுகள் என உலகின் 14 நாடுகளைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரத்து 676 உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

அத்துடன் வீடுகள், கட்டடங்கள், வாகனங்கள், உயிரினங்கள் என அனைத்தும் கண்ணிமைக்கும் நொடியில் அடித்துச் செல்லப்பட்டன. இதில் இந்தோனேசியாவில் 184,000 பேரும் இலங்கையில் 35,322 பேரும் பலியாகினர்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் தாக்கத்தால் அதிகளவான அழிவுகளை எதிர்கொண்ட இரண்டாவது நாடு இலங்கை. குறிப்பாக அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அம்பாந்தோட்டை மாத்தறை மற்றும் காலி ஆகிய கரையோர மாவட்டங்களை இந்தக் கடலலை காவு கொண்டது.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலையால் இலங்கையில் பாரிய மனித உயிரழிவு அம்பாறை மாவட்டத்தி லேயே இடம் பெற்றது.

சன நெரிசல் மிக்க பயணிகள் ரயில் கொழும்பில் இருந்து ஹம்பந்தோட்டை வரை தனது பயணத்தை தொடங்கியது. காலை 9.30 மணியளவில் பெரலிய எனும் இடத்தில் ராட்சத அலைகள் ரயிலையும் அடித்துச் சென்றன.

இதில் பயணித்த ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மாண்டு போனார்கள். இது ஆசியாவின் ரயில் விபத்துகளில் முக்கியமானதுமானதும் மறக்க முடியாததுமான சோக நிகழ்வாகும்.

சுனாமி பேரலையால் நேரடியாக பாதிக்கப்பட்ட நாடுகளில் தங்கி இருந்த பல நாட்டு சுற்றுலாப் பயணிகளும் இந்த பேரலையில் சிக்கி உயிரிழந்துள்ளனர். கரையோர பிரதேசங்களில் இருந்த மீனவர்கள் சுனாமியால் அதிகமாக சிக்கி உயிரிழந்துள்ளனர்.

அவர்களையே நம்பி இருந்த ஆயிரக் கணக்கான குடும்பங்கள் இன்று வரை அந்த துயரிலிருந்து மீண்டு வர முடியாமல் தவிக்கின்றனர். பாரிய உயிர்ச்சேதம் சமூகங்களை அழித்ததால் பாதிக்கப்பட்ட அந்த சமூகங்களுக்கு இதன் தாக்கம் பேரழிவை ஏற்படுத்தியது. மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பெருமளவிலான இடம் பெயர்ந்தோர் பள்ளிகள் மற்றும் அரச கட்டடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

உயிர் வாழும் சேவைகள் மற்றும் வசதிகள் அற்ற உயர்வான பகுதிகளில் திறந்த வெளியில் தங்க வைக்கப்பட்டனர். மக்கள் அவதிப்பட்ட நிலையில் உடனடி நிவாரணத்துக்கு யூ.என்.எச்.சி.ஆர். மூன்று லட்சத்து எண்பதாயிரம் அமெரிக்க டொலர் நிதி உதவி வழங்கியது. யூ.என்.எச்.சி.ஆர். சுகாதார உதவி மற்றும் மருத்துவ கருவிகள் போன்றவற்றை வழங்கி உதவிக்கரம் நீட்டியது.

கடல் தாயின் சீற்றம் அடங்கும் வகையில் உயிர்ப்பலி நிகழ்ந்த இத்தினம் (2004.12.26) எல்லோரும் மனதிலும் இன்றும் கூட ஒரு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது. அந்தக் கறுப்பு நாளை கடல் தாயின் பசிக்கு இரையான என் சொந்தங்களை நினைவு கூறும் வகையில் இந்த பதிவினை செய்கின்றேன். இயற்கை சீற்றம் கொண்டால், மனித இயந்திரங்கள் வலுவிழந்து விடும்.



# கடலூரில் சுனாமி நினைவு தினம் பொதுமக்கள் கண்ணீர் அஞ்சலி

கடலூரில் 20 ஆம் ஆண்டு சுனாமி நினைவு தினத்தையொட்டி கடற்கரையில் பால் ஊற்றி, மலர்தூவி பொதுமக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்தோனேஷியாவில் உள்ள சுமத்ரா தீவில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் எழுந்த சுனாமி பேரலைகள் தமிழக கடற்கரையை தாக்கி, ஆயிரக் கணக்கானோர் பலியாகினர். கடலூர் மாவட்டத்தில் மட்டும் சுனாமி பேரலையில் சிக்கி 610 பேர் பலியாகினர்.

இந்நிலையில், சுனாமி பேரலையால் பலியானவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. இதையொட்டி, கடலூர் முதுநகர் சிங்காரத்தோப்பில் உள்ள சுனாமி நினைவுத் தூணுக்கு சுனாமியில் பலியானவர்களின் உறவினர்கள் மலர் வளையம் வைத்தும், மலர்தூவியும் அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்நாடு மீனவர் பேரவை சார்பாக அதன் தலைவர் சுப்பராயன் தலைமையில் 500 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் ஊர்வலமாக சென்று கடற்கரையில் அஞ்சலி செலுத்தினர். அப்போது பெண்கள் கடலில் பால் ஊற்றியும் மலர்தூவியும், துக்கம் தாங்காமல் கதறி அழுதனர். கடற்கரை மணலில் மெழுகுவர்த்தி ஏற்றியும் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.







# பெண்களுக்கு பாதுகாப்பில்லை: டி.டி.வி. தினகரன் கண்டனம்

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவியொருவர் துஸ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பில்லை என அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாணவி ஒருவர் அடையாளம் தெரியாத சிலரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என வெளியான செய்திகள் மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றன.



இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக திகழும் அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றிருக்கும் இந்த விரும்பத்தகாத சம்பவம் அப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் ஒட்டுமொத்த மாணவிகளின் பாதுகாப்பையும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

மாநிலத்தின் தலைநகரில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாணவிக்கு நடைபெற்றிருக்கும் இந்த சம்பவம் தமிழகத்தில் அனைத்து இடங்களிலுமே பெண்களுக்கு பாதுகாப்பில்லை என்பதையே மீண்டும் மீண்டும் வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

எனவே பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாணவியை துஸ்பிரயோகம் செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, இனிவரும் காலங்களில் மாணவிகள் அனைவரும் பாதுகாப்பான சூழலில் கல்வி பயில்வதை உறுதி செய்ய வேண்டும் என அண்ணா பல்கலைக்கழக நிர்வாகத்தையும் தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.




# மொசாம்பிக் சிறையில் அமைதியின்மை; 3 பேர் உயிரிழப்பு; 15 பேர் படுகாயம்!

மொசாம்பிக் சிறைச்சாலையில் நேற்று ஏற்பட்ட அமைதியின்மையால் 33 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 15 பேர் காயமடைந்துள்ளனர்.

இதன்போது 1,534 பேர் சிறையிலிருந்து தப்பிச்சென்றுள்ளனர் என வெளிநாட்டுஊடகங்கள்தெரிவிக்கின்றன.

தப்பிச்சென்றவர்களில் 150 பேர் மீளக் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்றைய தினத்தில் மொசம்பிக்கின் 2 சிறைகளில் சிறை உடைப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஊடகவியலாளர்கள் ஐவர் பலி!

காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஊடக வியலாளர்கள் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காசாவில் இயங்கிவரும் செய்தி நிறுவனத்தின் கார் ஒன்றின் மீது இஸ்ரேல் இந்தத் தாக்குதலை மேற் கொண்டுள்ளது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் விபரங்கள் தற்போது வெளியாகியுள்ளன

கடந்த ஆண்டு ஒக்டோபர் முதல் இஸ்ரேல் – ஹமாஸ் இடையே நடந்துவரும் மோதல்களினால் தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.






# இணையத் தாக்குதலுக்குள்ளான ஜப்பானின் விமான சேவை

ஜப்பான் விமான சேவை இணையத் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் டிக்கெட் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் காரணமாக உள்நாட்டு, சர்வதேச விமான போக்குவரத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி இன்று அதி காலை 7.25 க்கு ஜப்பான் விமான சேவை நிறுவனத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளது.

பரபரப்பான போக்குவரத்தைக் கையாளும் ஜப்பான் விமானச்சேவையில் ஏற்பட்டுள்ள இந்த இணையத் தாக்குதல் உலகளவில் கவனம் பெற்றுள்ளது.

பக்கங்கள் 03

கனடா முரசு

வியாழக்கிழமை 26/12/2024

## பஸ் விபத்தில் இருவர் காயம்

கனடாவின் ரொறன்ரோவில் இடம் பெற்ற பஸ் விபத்தில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

கார் ஒன்றும் டி.டி.சி. பஸ் ஒன்றும் மோதிக் 02




# பண்டிகை காலத்தில் கனடாவில் தீவிர பொலிஸ் சோதனைகள்

**பண்டிகை காலத்தில் கனடாவில் தீவிர பொலிஸ் சோதனை முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.**

**பல்வேறு இடங்களில் வாகனங்கள் சோதனை இடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.**

**குறிப்பாக வீதி போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

மேலும் குடிபோதையில் வாகனங்களை செலுத்துவோரும் இந்த சோதனைகளின் போது கண்காணிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே சுமார் 1500 வாகனங்கள் இவ்வாறு நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டுள்ளன.

குடிபோதை அல்லது போதைப் பொருள் பயன்பாட்டுடன் வாகனங்களை செலுத்துவோர் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் 911 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு தகவல் வழங்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.






# கனடாவில் நண்பர்களுக்கு கிடைத்த பெரும் அதிஷ்டம்

கனடாவில் நண்பர்கள் இருவருக்கு அதிஷ்டலாப சீட்டிழுப்பில் பெருந்தொகை பணம் விழுந்து அவர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் உள்ள நண்பர்கள் இருவருக்கே இந்த அதிஷ்ட இலாபம் கிடைத்துள்ளது.

வாங்கூவரைச் சேர்ந்த வேய் ஹிங் யுவென் மற்றும் டாங்க் மீ டேங்க் ஆகிய நண்பர்களே இவ்வாறு பரிசு வென்றுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி சீட்டிழுப்பு நடத்தப்பட்டுள்ளது. இந்த சீட்டிழுப்பில் ஒரு மில்லியன் டொலர்களை அவர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.

இந்த நண்பர்கள் நீண்ட காலமாக ஒன்றாக இணைந்து லொத்தர் சீட்டிழுப்பில் பங்கேற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. லொத்தர் சீட்டில் பரிசு கிடைக்கப் பெற்றமையை முதலில் நம்பவில்லை எனவும் பின்னர் இருவரும் அதனை உறுதி செய்து கொண்டனர் எனவும் தெரிவித்துள்ளனர்.



## பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. நேற்று அதிகாலை வேளையில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

டபின் மற்றும் யோர்க் டேல் வீதிகளுக்கு அருகாமையில் பனி படர்ந்த பாதையில் விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. என்ன காரணத்தினால் விபத்தை ஏற்பட்டது என்பது பற்றி விவரங்கள் வெளியிடப்படவில்லை.

ஆனால் சீரற்ற காலநிலையினால் இந்த விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்தவர்களுக்கு உயிர் ஆபத்து கிடையாது என தெரிவிக்கப்படுகிறது.



# கடத்தலுடன் தொடர்புடைய 10 பேர் கனடாவில் கைது

கனடாவின் பிரம்டன் பகுதியில் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய 10 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரம்டனில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இருந்து கடத்தப்பட்ட மூன்று பேரை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பீல் பிராந்திய பொலிஸார் இந்த கடத்தல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்கள் எவ்வித ஆபத்தும் கிடையாது என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களிடமிருந்து துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.




# கனடா பாடசாலை மீது தாக்குதல் எச்சரிக்கை

## ஆயுதங்கள் மீட்பு

கனடாவில் பாடசாலை ஒன்றின் மீது தாக்குதல் நடத்துவதாக எச்சரிக்கை விடுத்த இளைஞரின் வீட்டில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

யோக் பிராந்தியத்தில் பள்ளிக்கூடம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்துவதாக அச்சுறுத்தல் விடுத்த இளைஞர் ஒருவரின் வீட்டிலிருந்து இவ்வாறு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

யோக் பிராந்திய பொலிஸார் இந்த ஆயுதங்களை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த இளைஞர் சிலரிடம் வாய்மொழி மூலம் பள்ளிக்கூடம் மீது தாக்குதல் நடத்துவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சந்தேக நபர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகள் நடத்திய போது அவரது வீட்டில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த மாணவர் பள்ளிக்கூடத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்டவர் என தெரிவிக்கப்படுகிறது.